# பனித்துளி செய்திகள்!

“அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!” (சங்கீதம் 33:9)
துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

**22.11.2021**

## 11. ‘அவர் நம் கையைப் பிடித்து’ நடத்தும் ரகசியம்!

‘திராட்சை செடியாகி’ கிறிஸ்துவோடு ‘கொடியாய்’ நிலைத்திருப்பது பாக்கியம்! ஏனெனில் “என்னில் நிலைத்திருப்பவனிடத்தில் நானும் நிலைத்திருப்பேன்!” என பொய்யுரையாத கிறிஸ்து வாக்குத் தந்துள்ளார்! (யோவான் 15:4).

ஓர் ‘கொடியாக’ கிறிஸ்துவையே நம்பி, ‘செடியாகிய’ அவரையே சார்ந்து சார்ந்து வாழ்பவன் முதலாவதாய் கண்டடையும் கனிதரும் வாழ்க்கை என்ன தெரியுமா? **இனி அவர் நம்மில் நிலைத்திருப்பார்!** என்ற ஆச்சரியம் தான்! ஆம், அவரது கையைப் பிடித்து, கையைப் பிடித்து நம்பி வாழ்ந்தவன் எவனோ.... அவனது கொடிய இக்கட்டு நேரத்தில் “**அவரே தன் கரம் நீட்டி** அவன் கையைப் பிடித்து” நடத்துவார்! அல்லேலூயா.

**– ரத்னம்**